DEPOSITION OF WITNESS
---
IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| Original Suit Case No. | : | 155/2018 |
| H.M.O.P. “ | : | |
| M.C.O.P. “ | : | |
| S.C. “ | : | |
| W.O.P. “ | : | |
| EP. “ | : | |
| Deposition of Witness for | : | P.W. 2 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | காசி விஸ்வநாதன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 03.09.2024

**முதல் விசாரனை:**

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ3 உயிலில் உள்ள 1வது சாட்சியாக உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் மூக்கையா என்பவர் கையெழுத்துப்போட்டார் அதை நான் பார்த்தேன். நான் நேமத்தான்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர். இவ்வழக்கின் தரப்பினர்களை தெரியும். 1ம் பிரதிவாதி சோலையம்மாளின் கணவர் மற்றும் அவரது மாமனார் மூக்கையா சேர்வை ஆகியோர்களை தெரியும். மூக்கையா சேர்வை 31.12.1983 தேதியில் ஒரு உயில் எழுதி வைத்தது எனக்கு தெரியும். அந்த உயிலில் நானும், ஆத்தங்குடியைச் சேர்ந்த சுந்தர்ராஜன் மகன் சுந்தர்ராஜன் என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டோம். பள்ளத்துாரைச் சேர்ந்த லெட்சுமணன் என்பவர் மேற்படி உயிலை தட்டச்சு செய்து அவரும் கையெழுத்துப்போட்டுள்ளார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ3 உயிலில் 2வது சாட்சி கையெழுத்தாக சுந்தர்ராஜ் என்பவரும் தயார் செய்தவர் என்ற இடத்தில் லெட்சுமணனும் கையெழுத்துப்போட்டுள்ளார்கள். மேற்படி சுந்தரராஜன் மற்றும் லெட்சுமணன் ஆகிய இருவரும் கொரோனா சமயத்தில் இறந்து விட்டார்கள். நாங்கள் மூவரும் சாட்சி கையெழுத்துப்போட்டதை மூக்கையா சேர்வை பார்த்தார். அதை போல மூக்கையா சேர்வை கையெழுத்துப்போட்டதை நாங்கள் இருவரும் பார்த்தோம். உயில்

எழுதும் சமயத்தில் அவருக்கு சிறுநீரக பிரச்சனை இருந்தது. அப்போது அவர் சுயநினைவோடுதான் இருந்தார்.

**குறுக்கு விசாரணை:**

1 முதல் 3 பிரதிவாதிகளின் வழக்கறிஞர் தனது தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறிவிட்டார்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)- திரு.மு.வீரணன் M.A., L.L.M.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.